கடவுள் மனிதனானார் என்ற எளிமையான இதயத்தை ஊடுருவும் செய்தி, ஆண்டவரின் புத்தாண்டு நமக்கு நற்செய்தியையும் புதிய தொடக்கத்தின் வாழ்த்தொலியையும் வழங்குகிறது. மாபெரும் புதிரான காட்சி என்பதையே ‘திருக்காட்சி’ என்ற கிரேக்க சொல் குறிக்கிறது. காரிருள் வேளையில் மிகவும் எளிமையான வகையில் ‘உலகின் ஒளியாக’ இயேசு நமக்கு வெளிப்படுத்தப்பட்டார். உலகப் பாடுகளிலிருந்து மனுக்குலத்தையேக் காப்பாற்றும் வாக்குறுதியுடன் அவர் வருகிறார். அவரது வார்த்தை வழியாக அந்த ஒளி பிரகாசிக்கும் என்பதை இறைவாக்கினர் எசாயா முன்னறிவித்தார் (திப. 36:9). காரணம் கிறிஸ்துவின் திருக்காட்சி வழி மனுக்குலத்தோடு அவரை இணைத்துள்ளது.

அந்த மூன்று ஞானிகள், அவருக்கு அஞ்சலி செலுத்த வந்த அவர்கள் புறவினத்தவர், அரசருக்கு செலுத்த வேண்டிய பரிசுப்பொருட்களுடன் வந்தனர். நம் அனைவரையும் பிரதிநிதிக்கும் அவர்களைப் போல் நாமும் செய்ய வேண்டும் என்ற உள்ளுணர்வு ஏற்படவில்லையா? இறைமக்கள் என்ற வகையில் அவரைத் தேடும் எண்ணம் நமது உள்ளத்தின் ஆழத்தில் ஏற்பட வேண்டும் அந்த ஞானிகள் போல் மண்டியிட்டு அவருக்கு புகழும் ஆராதனையும் செய்வது, மண்ணுலகிலும் விண்ணுலகிலும் அவரது அரசாட்சிக்குச் சான்றுபகரும். ஏனெனில் அவர் இம்மானுவேல், கடவுள் நம்மோடு எக்காலத்திலும்.

> பொன் அரசத்துவத்தையும்
> சாம்பிராணி தெய்வீகத்தையும்,
> வெள்ளைப்போளம்
> நல்லடக்கத்தையும் குறிக்கின்றன.
> அதனால், அரசராக பொன்னையும்,
> தெய்வமாக சாம்பிராணியையும்,
> மனிதனாக வெள்ளைப்போளத்தையும்
> அவருக்கு அவர்கள் வழங்கினர்.
>
> - புனித ஜோன் கிறிஸ்சஸ்தம்

இன்றைய வாசகங்களிலிருந்து எந்த அளவுக்கு ஆறுதல் பெற முடியும் என்பதை படித்து, தியானித்துப் பாருங்கள். மீட்பளிக்கும் வாக்குறுதி வழி நமக்கு நம்பிக்கையை கடவுள் வழங்கியுள்ளார்...உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார். முதல் வாசகத்தை நமது சிந்தனைக்கும் வாழ்க்கை நடைமுறைக்கும் எடுத்துக் கொள்ளலாம். முதலாவது, பரிசுப்பொருள்களை தாங்கி வந்து ஞானிகள் போல் ஆண்டவருக்கு எவ்வாறு பரிசளிக்க முடியும்... நமது நேரத்தை, அனுபவத்தை, நிபுணத் துவத்தை பரிசளித்து, பிறருக்குச் சேவையாற்ற முடியும். இரண்டாவது, ஞானிகள் “வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள்” என்பதை கவனிக்க வேண்டும். இயேசுவோடு உறவு கொண்டு வாழும் போது, நீங்களும் நானும் அதே வழியில் திரும்புவதில்லை. சிந்தித்துப் பாருங்கள், இது ஆறுதலையும் உந்துதலையும் வழங்கவில்லையா? இதற்கு மேலே, எல்லாக் கத்தோலிக்கர்களுக்கும் இது தனிப்பட்ட முறையிலும் சமூக முறையிலும் ஆண்டவரின் திருக்காட்சி அனுபவமாக அமையும்! ✝



INTERNAL CIRCULATION ONLY
BUL 01/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

7 ஜனவரா 2017
ஆண்டவரின் திருக்காட்சி



# எளிமையானது ஆனால் மனதைத் தொடும் வெளிப்பாடு

| | |
|---|---|
| **மினவுதல் மாதா தேவாலயம்**<br>85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்<br>தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542<br>தொ.நகல் : 06-767 7544<br>Email: : serembanvisitation@gmail.com<br>Website: www.visitationseremban.org<br>பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்<br>உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய் | *2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*<br>***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***<br>*2018 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*<br>*என் நிலையில் கிறிஸ்துவை அனுபவிக்கிறேன்*<br>***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***<br>***( 1848 – 2018 )*** |

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: ஆண்டவரின் திருக்காட்சி விழா: (ஆண்டு இரண்டு) சனி 06-01-2018 ஞாயிறு 14-01-2018**

எசா 60: 1-6, தி.பா 71: 1-2, 7-8, 10-11, 12-13 எபே 3 2-3a, 5-6 மத்தேயு 2: 1-12

**ஆண்டவரே, எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள் (தி. பா 71)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 06 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (வழிபாட்டுக் குழு) | |
| ஞாயிறு | 07 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (வழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (ஆங்கிலம்) (வழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ)<br>மாலை 6.00 மணி கம்.செபீர் (தே.மொ) | **புதிய மறைக்கல்வி வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும் (அனைத்து மொழி)**<br>முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 08 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 09 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணிக்கு திருமணி ஆராதனையும் திருப்பலியும் ( த) புனித லூர்து அன்னை சிற்றாலயம் - சாகா* |
| புதன் | 10 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணிக்கு திருமணி ஆராதனையும் திருப்பலியும் ( த) வேளாங்கண்ணி சிற்றாலயம் - காடோங்* |
| வியா | 11 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 12 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு: ( ஆண்டு இரண்டு)**

1 சாமு 3: 3b-10, 19, தி.பா 39: 2, 4ab, 7-8a, 8b-9, 10 1 கொரி 6: 13c-15a, 17-20 யோவான் 1: 35-42

**உமது திருவுளம் நிறைவேற்ற ஆண்டவரே, இதோ வருகின்றேன். (தி. பா 39)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 13 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு) | |
| ஞாயிறு | 14 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) ( )<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. கிறிஸ்தோபர்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய அதிச மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 ஜனவரி (தை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **பங்கு ஆலய காணிக்கை**

30/31 டிசம்பர் ரிம:10,260.20

புத்தாண்டு 1/1/18 ரிம:13,097.10 தித்தி ரிம: 68.00

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

2) 06/07 திருப்பலிகளின் போது எடுக்கப்படும் 2 ஆவது காணிக்கை சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் பணிக்காக எடுக்கப்படும்.

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

3) அனைத்து மொழி ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளும் 07 ஜனவரி 2018 ஞாயிறு அன்று தொடங்க உள்ளது. பதிவுகள் அந்தந்த வகுப்பறைகளில் நடைபெறும்.

- **சிரம்பான் மினவுதல் தேவாலய முக நூல் பக்கம் (@churchofthevisitationsban)** நம்முடைய பங்கின் முக நூல் பக்கத்திற்கு சென்று அண்மைய மற்றும் விறுவிறுப்பான செய்திகளைக் காணுங்கள். அனைத்து வயதினரும் பங்கேற்கும் ஒரு தளமாக இருக்கும் இதில் பங்கு மக்களோடு உரையாட ஒரு வாய்ப்பாக அமையும்.
- **2018 இல் திருமணம் புரிவோரின் கவனத்திற்கு:** திருமணத்திற்கு முன் பங்கு குருவானவரோடு சந்திப்பை முன்பதிவு செய்துகொள்ளுங்கள். திருமண தயாரிப்புப் பயிற்சிகள் விரைவில் தொடங்கவுள்ளன.
- **ஆலயத் தூய்மை:** ஆலயத்தின் உள்ளும் புறமும் , மாதா கெபி (மெழுகுத்திரி தட்டுகள்) எப்போதும் தூய்மையைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்**

அ) ஜோசப் பெர்னாண்டஸ் (இறப்பு: 31/12/2017)

ஆ) பிரான்சிஸ் கெய்ன் (இறப்பு: 02/01/2018)

**முடிவில்லா ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

- **மாமறை மாவட்ட அழைத்தலுக்கான குழு (APVT)** ஜனவரி 20/21 தேதிகளில் நம் ஆலயத்திற்கு வருகை தரவிருக்கின்றார்கள். அவர்களை நாம் வரவேற்போம்
- **இறந்தோர் திருப்பலியில் இறுதி உரை:** இறந்தோருக்குப் புகழ் சேர்க்கும் வகையில் இறப்புத்திருப்பலியில் சிறு உரை கொடுக்க விரும்பினால், தயவு செய்து பங்கு குருவானவரை சந்திக்கவும். உரை தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும் (சுருக்கமாக). இதை அதிச/சோன் பொறுப்பாளர்களும் கவனத்தில் கொள்ளுங்கள்.
- **கிறிஸ்துவர்களின் ஒன்றிப்பு வாரம்: 18-25 ஜனவரி 2018** - பிற கிறிஸ்துவ சகோதர சகோதரிகளோடு ஒரு வாரம் செபத்தில் ஒன்றித்திருக்க அழைக்கிறோம். மினவுதல் தேவாலய குழு 26-01-2018 வெள்ளி 8.00 மணி செபத்தை முன்னின்று வழி நடத்துவர். அனைவரையும் வரவேற்கிறோம்.
- **ஆலய வளாகம், வகுப்பறைகள்/ மண்படம் முன் பதிவு:**
  கூட்டங்கள் நடத்தவிரும்புவோர் முன்னதாகவே அறைகளைப் பதிவு செய்துகொள்ளுங்கள். கடைசி நேர பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படாது.
- **குருத்துவ அபிஷேகக் கொண்டாட்டம்:**
  டீக்கன் நிக்கோலஸ் ஹோ ஜெங் கின்( ரஹாங் கார்மேல் சபை, சிரம்பான்_
  நாள்: ஜனவரி 31, 2018 (பொதுவிடுமுறை) காலை 10.30
  இடம்: புனித தோமஸ் மூர் ஆலயம், சுபாங் ஜெயாஅனைவரையும் வரவேற்கிறோம்.
- **170 ஆம் ஆண்டு கொண்டாட்டம் பிப்ரவரி 3, 2018**
  அனைத்து மொழியினரும் பங்கெடுக்கலாம்.
  வயது 7 வயதினருக்கும் மேல்
  தொடர்புக்கு:
  எட்ரியன்(ஆ) 010-897 0642
  அண்டர்சன் (தே.மோ) 019-4688 277
  ஐரின் (த) 016-3666 843
  எட்வின் (சீ) 012 2059209
  ( இணையத்தின் வழி பதிவுக்கு கீழ்க்கண்ட தொடர்பைப் பயன்படுத்துங்கள் )




**https://docs.google.com/forms/d/e/1FAIpQLSfSZ2_DaXqroHfZ0xMbPstgf75TBPyIPiTDuSLm_IiOsZAmw/viewform?usp=sf_link**

- **மறைதிரு. ஜோர்ஜ் - ஜனவரி 13-21 வரை விடுமுறையில் செல்லவிருக்கிறார். அவரை நம் செபத்தில் ஒப்புக்கொடுப்போம்.**
- **குருக்களின் ஆண்டு மேய்ப்புப்பணி மாநாடு (CAPA)** ஜனவரி 22-25 2018 வரை நடைபெறும்.
- **பொங்கல் திருவிழா:** ஜனவரி 27 (சனி) மாலை 7.00 மணிக்கு: திரு.சி.பாண்டித்துரை அவர்களின் சொற்பொழிவு **"என்றும் நல்ல நாள்"**
  ஜனவரி 28, 2018 பகல் 2.-- - 7.30 வரை கலை கலாச்சார நிகழ்வுகள் அனைவரையும் வரவேற்கிறோம்.
- **சாகா சிற்றாலயம் - புனித லூர்து அன்னை திருவிழா** பிப்ரவரி 9-11, 2018
- **திரு நீற்றுப் புதன்** பிப்ரவரி 14, 2018
- **சீனப் புத்தாண்டு திருப்பலி** பிப்ரவரி 16, 2018 காலை 8.30 மணி